*மே 18, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

**இனிய குழந்தாய், நான் உன்னுடைய இராஜ்ஜியத்தின் அதிர்ஷ்டத்தை உனக்கு கொடுக்கின்றேன். நீ இப்படிப்பட்ட ஒரு பாபாவை முன்பு பார்த்திருக்கின்றாயா? இத்தகைய ஒரு தந்தை நன்றாக நினைவு செய்யப்பட வேண்டும். நீ உன்னுடைய ஸ்தூல கண்களால் அவரை பார்க்க முடியாது. நீ அவருடன் யோகத்தில் இருக்க வேண்டும். நினைவும் ஞானமும் மிகவும் எளிதாகும். நீ விதையையும் மரத்தையும் தெரிந்துக்கொள்ள வேண்டும். அந்த நிராகார மரத்தின் பகுதியாக இருந்தவாறு, நீ மனிதகுல மரத்தின் பகுதியாக ஆகிவிட்டாய்.**

***இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் தங்கயுகத்திற்கும் பிரம்மாண்டத்திற்கும் மாஸ்டர் என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்துக் கொள்கின்றேன். நான், நிராகாரமான உங்களை நினைவு செய்வேன். நிராகார மரத்தில் உங்களுக்கு அருகில் என்னை நான் ஸ்திரப்படுத்திக்கொள்வேன்.***

**சமார்த்தி அல்லது சக்தி**

**நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.**

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

***பாபா ஆத்மாவிற்கு: நான் மீண்டும் உன்னை தெய்வீகமாகவும் மிகவும் சக்தி வாய்ந்தவராகவும் ஆக்குகின்றேன். சொர்கத்தை உருவாக்குவது சக்தி வாய்ந்தவர்களின் பணியாகும். எவ்வாறாயினும் அவர் மறைமுகமாக இருக்கின்றார். நீங்கள் மறைமுகமான போர்வீரர்கள் ஆவீர்கள். தந்தைக்கு குழந்தைகளான உங்கள் மீது அதிகமான அன்பு இருக்கின்றது.***

**நான் மறைமுகமாக இருக்கும் மனோபாவத்தையும் மாஸ்டர் சர்வ சக்திவான் என்பதையும் ஏற்க உறுதியாக இருக்கிறேன். நான் என்னை நகர்த்துபவரின் மீது என் கவனம் இருப்பதைப் பார்த்துக் கொள்வேன். மேலும் நான் ஒரு மறைமுகமான போர்வீரராக இருப்பேன்.**

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

***பாபா ஆத்மாவிற்கு: காட்சிகள் வழங்குவதும் மந்திரம் ஆகும். மக்கள் தீவிரமான பக்தி செய்யும் போது, நான் அவர்களுக்கு ஒரு காட்சியை அருள்வேன். உதாரணமாக, நான் அவர்களுக்கு காளியின் ரூபத்தை காட்டுவேன்; அவர்கள் அவளின் விக்கிரத்தின் மீது எண்ணெய் ஊற்றுகிறார்கள். தந்தை விளக்குகின்றார்: நான் என் கையில் காட்சிகள் வழங்கும் சாவியை வைத்திருக்கின்றேன். நான் அவர்களின் அசைகளை தற்காலிமாக பூர்த்தி செய்யும் பொருட்டு அவர்களுக்கு ஒரு காட்சி வழங்குவேன். ஆனால் அவர்கள் யாரும் அதன்முலமாக என்னை சந்திக்க முடியாது. நம்பிக்கையானது காட்சிகளால் வளர்க்கப்பட முடியாது. நம்பிக்கை என்பது ஞானம் மற்றும் யோகத்தின் மூலம் வளர்க்கப்படுகின்றது.***

இன்று என்னுடைய திருஷ்டியில், நான் என் பார்வையில் காட்சிகளை அருளும் மந்திரவாதியான பாபாவை வைத்திருப்பதில் உறுதியாக இருக்கின்றேன். ஆத்மாக்கள் அவர்களின் பக்தி செய்வதை பார்க்கும்போதும், நான் தெய்வீக காட்சிகளின் சாவியை வைத்திருப்பவரை நான் பார்க்கின்றேன்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.